**தலைப்பு 198 – நீர்ப்பாசன அமைச்சு**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

நீர்ப்பாசன அமைச்சின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) ஆம் பிரிவின் பிரகாரம் நீர்ப்பாசன அமைச்சின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2022 யூன் 15 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) ஆம் பிரிவின் பிரகாரம் அமைச்சிற்குரிய விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2022 யூலை 18 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்றது.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து, நிதிக்கூற்றுக்கள் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நீர்ப்பாசன அமைச்சின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்புக்கள்

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல், மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் அமைச்சால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் அமைச்சின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியிருந்ததுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நிமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு அமைச்சின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும் நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும்

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

### 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் நேரொத்ததாக உள்ளது எனவும்,

(ஆ) முன்னைய ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் வழங்கப்பட்ட பரிந்துரைகள் அமுல்படுத்தப்பட்டிருந்தது.

### 1.6 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கருத்துரைகள்

#### 1.6.1 நிதியல்லா சொத்துக்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| (அ) நிதியல்லா சொத்துக்களின் ஆரம்ப மீதிகளை பதியும் போது இயந்திர உபகரணங்கள் மற்றும் உபகரண மீதி ரூபா 1,544,530 அதிகரித்து காண்பிக்கப்பட்டிருந்தது. | அறிக்கை தயாரிக்கும் போது உரிய கணக்காண்டாக CIGAS முறைமையில் முன்னைய ஆண்டின் தினமொன்று ஈடுபடுத்தியமையால் அதன் ஆரம்ப மீதியில் நேரடியாக சேர்க்கப்பட்டிருந்ததுடன் அதன் பிரகாரம் ரூபா 1,544,530 பெறுமதியுடைய இயந்திர உபகரணங்கள் மற்றும் உபகரணங்கள் 2021 இன் ஆரம்ப மீதியில் சேர்க்கப்பட்டுள்ளது. | நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் போது சரியான தகவல்களை உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) அரச கணக்குகள் திணைக்களத்தினால் நிலையான சொத்துக்கள் கணக்கீடு செய்தல் தொடர்பாக வழங்கப்பட்ட ஆலோசனையின் பிரகாரம் நிதிச் சொத்துக்களை இனங்கண்டு கணக்கீடு செய்யப்பட வேண்டியிருந்த போதிலும் 2021 ஆம் ஆண்டில் ரூபா 31,037,018,021 செலவில் அபிவிருத்தி செய்யப்பட்ட ஆதனங்கள் குறித்துரைத்த ரீதியில் இனங்கண்டு நிதியல்லா சொத்துக்களாக கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. அதனிடையே ரூபா 19,370,038,036 நீர்ப்பாசனத் திணைக்களத்தை | செலவின விடயம் 2105 - நீர்ப்பாசன முகாமைத்துவ பிரிவிற்கு பாதீட்டு மதிப்பீட்டின் மூலம் ஒதுக்கப்பட்ட இந்த செலவின விடயத்திற்காக நீர்ப்பாசன காணி அலகுகளின் வினைத்திறனை உச்சப்படுத்துதல் மற்றும் விவசாயிகளை வலுவூட்டுவதற்குரிய துறை சார்ந்த மட்டத்தில் மேற்கொள்ளப்படுகின்ற பணிகளுக்குரிய செலவினங்களுக்காக ஈடுபடுத்தப்பட்டிருந்தது. இந்த செலவினங்கள் நிதியல்லா சொத்துக்களுக்குரிய செலவினங்களான வடிவில் | நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் போது ஒப்பீட்டு ரீதியில் பரீட்சித்து சரியான தகவல்கள் உள்ளடக்கிய மையை உறுதிப்படுத்து வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | உள்ளடக்கிய ஏனைய 03 நிறுவனங்களுக்கு நிதியேற்பாடு விடுவிக்கப்பட்டு உரிய செயற்திட்டங்கள் அமுல்படுத்தப்பட்டிருந்தது. அந்த சொத்துக்கள் அந்த நிறுவனத்திற்கு கையேற்று கணக்கீடு செய்தல் தொடர்பாக ஆலோசனைகளும் வழங்கப்பட்டிருக்கவில்லை. | இல்லாதிருந்தமையால் சொத்துக்களாக கணக்கீடு செய்யப்படாதிருந்த மையினால் இந்த வேறுபாடு ஏற்பட்டிருந்தது. | |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 செலவின முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 23 செலவின விடயங்களுக்காக ஒதுக்கப்பட்ட கூட்டுமொத்தமான ரூபா 132,147,800 ஆன தேறிய ஒதுக்கீடுகளில் கூட்டு மொத்தமாக ரூபா 83,609,978 அதாவது 63 சதவீதம் சேமிக்கப்பட்டிருந்தது. ஒவ்வொரு செலவின விடயத்தின் கீழும் சேமிப்பு 41 சதவீதத்திற்கும் 100 சதவீதத்திற்கும் இடையிலான வீச்சினைக் கொண்டிருந்தது. | செலவினங்களை குறைப்பதற்காகவும், அரச செலவினங்களை முகாமைத்துவம் செய்வதற்காகவும் அத்தியவசியமான பணிகளை மாத்திரம் மேற்கொள்ளல், நாட்டில் காணப்பட்ட கொவிட் 19 தொற்றுநோயின் காரணமாக திட்டமிடப்பட்ட பிரகாரம் செலவினங்கள் மேற்கொள்ளப்படாமை. | பாதீடு தயாரிக்கும் போது இயலுமானவரை முரண்களை குறைக்கக் கூடிய வகையில் தயாரித்தல் வேண்டும். |
| (ஆ) | 03 மூலதன செலவின விடயங்களுக்கு ஒதுக்கப்பட்டிருந்த நிதியேற்பாடு ரூபா 4,911,880,000 கூட்டுமொத்தமாக இருந்ததுடன் அதில் ரூபா 3,567,724,627 தொகை மாத்திரமே செலவிடப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் ரூபா 1,344,155,373 சேமிப்பு அவதானிக்கப்பட்டது. சேமிப்புக்களின் சதவீதம் 27 சதவீதம் ஆகும். | நாட்டில் காணப்பட்ட கொவிட் 19 தொற்று நோய் நிலைமையின் காரணமாகவும், நாட்டில் காணப்பட்ட நெருக்கடியின் நிலைமை காரணமாகவும் திட்டமிடப்பட்ட பிரகாரம் செயற்திட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாமை மற்றும் கொடுப்பனவு நடவடிக்கைகளுக்காக போதியளவான பிரகாரம் கட்டுநிதி திறைசேரியிலிருந்து கிடைக்கப்பெறாமை காரணமாக இருந்தது. | ஒதுக்கப்பட்ட நிதியேற்பாட்டை உச்ச அளவிலும் ஆக்கபூர்வமான தாகவும் பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | குறைநிரப்பு நிதியேற்பாட்டின் கீழ் அதிகார இலக்கம் 136, 375 மற்றும் 820 இன் கீழ் விவசாய பிரதேசங்களில் சிறிய மற்றும் நடுத்தர அளவிலான குளங்களை மறுசீரமைக்கும் செயற்திட்டத்திற்காக 03 சந்தர்ப்பங்களின் போது கூட்டுமொத்தமாக ரூபா 760,500,000 தொகையும், அதிகார இலக்கம் 905 இன் கீழ் ஒன்றிணைந்த நீர்அணை மற்றும் நீர்வள முகாமைத்துவ செயற்திட்டத்திற்காக குறைநிரப்பு நிதியேற்பாட்டின் கீழ் ரூபா 651,380,000 தொகையும் மற்றும் அதிகார இலக்கம் 1090 இன் கீழ் 2021 திசெம்பர் 31 ஆந் திகதி குறைநிரப்பு உதவி சேவை மற்றும் அவசர சந்தர்ப்ப பொறுப்பு செயற்திட்டத்தின் கீழ் ரூபா 3,500,000,000 தொகையும் வழங்கப்பட்டிருந்தது. எனினும் அந்த நிதியேற்பாடுகளில் முறையே ரூபா 392,485,503 தொகை, ரூபா 347,351,813 தொகை மற்றும் ரூபா 604,318,057 தொகைகள் சேமிக்கப்பட்டிருந்தது. அந்த சேமிப்புக்களின் சதவீதம் முறையே 52, 53 மற்றும் 17 சதவீதமாக இருந்தது. அபிவிருத்தி செயற்திட்டங்களை அமுல்படுத்துவதன் மூலம் எதிர்பார்க்கப்பட்ட பிரதிபலன்களை பெற்றுக் கொள்வதற்காக தேவையான நடவடிக்கைகள் திட்டமிடப்படாமையினால் அந்த நிதியேற்பாடு சேமிக்கப்பட்டிருந்தமையும் அவதானிக்கப்பட்டது. | - மேற்படி - | - மேற்படி - |

## 2.2 பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகளுக்கு உடன்படல்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| அரச கணக்குகள் சுற்றறிக்கை இலக்கம் 255/2017 இன் பந்தி இலக்கம் 02(d) இன் பிரகாரம் நிதியாண்டிற்குரிய கொடுப்பனவுகள் அந்த நிதியாண்டின் போது விடுவிக்கப்பட வேண்டியிருந்ததுடன் எந்தவொரு செலவின பொறுப்பும் அடுத்து வரும் ஆண்டில் தீர்த்து வைக்கும் நோக்கத்துடன் முன்கொண்டு செல்ல முடியாதிருந்தமையும் ஆலோசனைகளுக்கு முரணாக ஏற்படுத்தப்பட்ட பொறுப்புக்களை தீர்த்து வைப்பதற்காக திறைசேரி தொடர்ந்து நடவடிக்கை எடுக்காதிருந்தமையும் ஆலோசனை வழங்கப்பட்டிருக்கும் போது 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 2,105,384,895 தொகையான பொறுப்புக்கள் ஏற்படுத்தப்பட்டிருந்தன. | ஆண்டில் கோரப்பட்ட கட்டுநிதி அளவு கிடைக்காமையின் காரணமாக பொறுப்பாக முன்கொண்டு செல்லப்பட்டிருந்தது. | அரச கணக்குகள் சுற்றறிக்கை இலக்கம் 255/2017 இன் பந்தி இலக்கம் 02(d) இன் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 2.3 முற்பண கணக்கு மீதி

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 05 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக இனங்காணப்படாத ரூபா 434,066 கடன் மீதி 2022 மே வரையிலும் இனங்கண்டு அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நீர்ப்பாசன அமைச்சு மற்றும் அரச கணக்குகள் திணைக்களத்துடன் கலந்துரையாடி இந்த மீதியை சரிசெய்வதற்காக தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றது. | கடன் மீதியை இனங்கண்டு அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) சேவையை விட்டுச் சென்ற 04 உத்தியோகத்தர்களிடம் இருந்து கூட்டுமொத்தமாக ரூபா 661,642 கடன் பணம் அறவிட வேண்டியிருந்ததுடன் அதில் ஒரு | பதிலளிக்கப்பட்டிருக்க வில்லை. | தாபன விதிக் கோவையின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டியிருந்ததுட ன் கடனை |

| | | |
|---|---|---|
| உத்தியோகத்தரிடமிருந்து ரூபா 73,062 தொகையான கடன் பணம் என்பன 05 வருடங்களுக்கு மேற்பட்ட பழையதாகும். அந்த கடன் பணத்தை அவரின் பிணையாளரிடமிருந்து மீள அறவிட வேண்டியிருந்த போதிலும் அமைச்சு அதன் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. மேலும் தாபன விதி ஏற்பாடுகளின் பிரகாரம் அது தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்காமை தொடர்பாக ஒழுக்காற்று நடவடிக்கைகளை எடுத்தல் வேண்டும். |

## 2.4 வைப்புக் கணக்குகள்

------------------------------------

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| வெலிஓயா வதிவிட செயற்திட்ட முகாமைத்துவம் மற்றும் கூட்ட மண்டபத்தை நிர்மாணிப்பதற்காக 2016 ஆம் ஆண்டின் போது ஆரம்பிக்கப்பட்ட நிர்மாண செயற்பாடுகளின் பௌதீக செயன்முன்னேற்றம் 85 சதவீதம் அடையப்பட்டமையின் பின்னர் இடைநடுவில் நிறுத்தப்பட்டிருந்தது. ஒப்பந்தக் கம்பனிக்கு செலுத்தப்பட்ட தொகையில் நிறுத்தி வைக்கப்பட்ட தொகையான ரூபா 1,251,774 தொகை 05 வருடங்கள் கடந்திருந்த போதிலும் அதனை வருமானத்திற்கு எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | மிகுதி வேலைப் பகுதியை மேற்கொள்ளும் போது உரிய கொடுப்பனவு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக முன்னாள் ஒப்பந்தகாரருக்கு மேற்கொள்ளப்பட்ட சகல கொடுப்பனவுகளுக்குமுரிய நிறுத்தி வைத்தல் பணத்தின் கூட்டுமொத்தமான ரூபா 1,251,774 தொகையை அரசாங்கத்திற்கு அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றமையால் இந்த நிறுத்தி வைத்தல் பணம் ஒப்பந்தகாரருக்கு செலுத்தப்பட்டிருக்கவில்லை | பொறுப்புக்களை புறக்கணித்துள்ள ஒப்பந்தகாரர் தொடர்பான உடன்படிக்கை சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுத்து கறுப்பு பட்டியலில் இடுதல் வேண்டும். எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்களை விரைவாக நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 2.5 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

**அவதானிப்புக்கள்**

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் தாபன விதிக் கோவை | | | |
| தாபன விதிக் கோவையின் VII ஆம் அத்தியாயத்தின் 12 ஆம் பிரிவு மற்றும் அரசாங்க சேவைகள் ஆணைக் குழுவின் பணி நடைமுறை விதி 115 ஆம் பிரிவு | கொத்மலை நீர்ப்பாசனம் மற்றும் நீர் முகாமைத்துவம் தொடர்பான சர்வதேச பயிற்சி நிறுவனத்தின் கணக்காளர் பதவிக்காக இலங்கை கணக்காளர் சேவையின் (III/II) ஆம் வகுப்பின் கணக்காளர் பதவியொன்று அங்கீகரிக்கப்பட்டிருக்கும் போது மேற்கூறப்பட்ட பிரிவின் ஏற்பாடுகளுக்கு முரணாக அதற்கு உயர்ந்த முதலாவது பந்தியின் வகுப்பின் பதவியில் இருக்கின்ற உத்தியோகத்தர்கள் பதிற்கடமைக்காக நியமிக்கப்பட்டு ரூபா 1,280,150 படி செலுத்தப்பட்டிருந்தது. | உரிய உத்தியோகத்தர் இந்த நிறுவனத்தில் கணக்காளர் பதவியில் பதிற்கடமை கடமைகள் பொறுப்பேற்ற ஆரம்ப சந்தர்ப்பத்தின் போது அவர் III ஆம் வகுப்பின் கணக்காளர் பதவிக்கு உரித்தான ஒருவர் ஆகும். பின்னர் அவர் I வகுப்பிற்கு பதவியுயர்வு வழங்கப்பட்டிருந்தது. வேறு கணக்காளர் ஒருவரை கோரப்பட்டிருந்த போதிலும் கிடைக்கப் பெறாமையின் அடிப்படையில் சேவை பெறப்பட்டிருந்தது. | தாபன விதிக் கோவைக்கு முரணாக மேற்கொள்ளப் பட்டுள்ள நியமனம் தொடர்பான உரிய சட்ட விதிகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 2.6 வங்கி கணக்கு செயற்பாடுகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| ஆண்டின் இறுதியில் காசேட்டின் மீதி பொதுத்திறைசேரிக்கு அனுப்ப வேண்டியிருந்த போதிலும் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு செயற்திட்டத்தின் 05 வங்கிக் கணக்குகளின் கூட்டுமொத்தமான ரூபா 316,156,487 தொகை பொது திறைசேரிக்கு அனுப்பப்படாமல் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. | இந்தக் கணக்குகளில் சேமிக்கப்பட்ட மீதியில் வெளிநாட்டு கடன் நிதியுதவியின் கீழ் (நிதியீட்டம்-12) உரிய செயற்திட்டத்திற்காக கிடைத்த கடன் உதவி நிறுவனங்களின் முற்பணமாக | நிதி அமைச்சினால் வழங்கப்பட்டுள்ள ஆலோசனை களுக்கு இணங்க ஆண்டின் இறுதியின் போது கணக்குகளை தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை |

| | | |
|---|---|---|
| | இருந்தமையால் ஆண்டின் இறுதியில் பொதுத்திறைசேரிக்கு அனுப்பப்பட்டிருக்கவில்லை. | எடுப்பதற்கு உரிய உள்ளக கட்டுப்பாட்டு முறைமையை விருத்தி செய்தல் வேண்டும். |

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 செயற்திட்டங்களை நிறைவேற்றுவதில் தாமதம்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| (அ) அமைச்சின் கீழ் அமுல்படுத்தப்பட்ட மதிப்பீடு செய்யப்பட்ட பெறுமதி ரூபா 153,915.7 மில்லியனான கல்பிட்டிகல நீர்த்தேக்கம், வினைத்திறன் மேம்படுத்தல் மற்றும் நீர்ப்பாசன முறைமையை செயற்திறனாக முகாமைத்துவம் செய்யும் செயற்திட்டம், கிங்நில்வளா திருப்பும் செயற்திட்டம், உமாஓயா திருப்பும் செயற்திட்டம் மற்றும் 04 அபிவிருத்தி செயற்திட்டங்கள் திட்டமிடப்பட்ட காலத்தை விட இரண்டு மடங்கு காலங்கள் கடந்திருந்த போதிலும் அந்த செயற்திட்டங்கள் அங்கீகாரத்திற்காக சமர்ப்பிக்கப்பட்டிருக்கும் போது அடிப்படை நோக்கத்தின் கீழ் இனங்காணப்பட்ட பொருளாதார நலன்கள் திட்டமிடப்பட்ட பிரகாரம் முடியாதிருந்தது. அது தொடர்பாக பகுப்பாய்வு செய்து பொறுப்பு வாய்ந்த தரப்பினர் தொடர்பில் நடவடிக்கை எடுக்காமல் அந்த 04 செயற்திட்டங்களுக்காக 14 வருட காலஎல்லையில் செலவிடப்பட்ட ரூபா 90,294.5 மில்லியன் கிரயம் | i. கல்பிட்டிகல நீர்த்தேக்க செயற்திட்டம்<br>2015 இல் ஏற்பட்ட அரசியல் மாற்றங்கள் மற்றும் உமா ஓயா செயற்திட்டத்தின் அடிப்படையில் ஏற்பட்ட மக்கள் எதிர்ப்பின் அடிப்படையில் செயற்திட்ட வேலைகளை ஆரம்பிப்பதற்கு முடியாதிருந்தது. 2017 திசெம்பர் மீண்டும் வேலை ஆரம்பிப்பதற்கு சீனாவின் EXIM வங்கியுடன் கைச்சாத்திடப் பட்டிருந்தது. 2018 யூன் மாதம் செயற்திட்ட முகாமைத்துவ அலகு (PMU) தாபிக்கப்பட்ட போதும் 2019 உயிர்த்த ஞாயிறு தாக்குதலினால் ஒப்பந்தக் கம்பனி ஆய்வினை இடைநடுவில் நிறுத்தி துறையிலிருந்து நீங்கியிருந்தது. 2020 இன் போது இலங்கை குடியரசின் நிதியேற்பாட்டின் அடிப்படையில் மீண்டும் அளவிடைகள், ஆய்வுகள், உட்கட்டமைப்பு வசதிகளை விருத்தி செய்யும் PMU இன் | செயற்திட்டம் தாமதம் அடைந்தமையின் காரணமாக எதிர்பார்க்கப்பட்ட பிரதி நலன்களுக்காக ஏற்படுகின்ற தாக்கங்களை மதிப்பீடு செய்து அது தொடர்பாக அமைச்சரவைக்கு அறிக்கையிடல் வேண்டும். பதவியணியினருக்க ாக சேவை நீடிப்பு வழங்கும் போது தாமதத்திற்கான காரணங்கள் எதிர்பார்க்கப்பட்ட நலன்கள் இழக்கப்படும் தாக்கங்கள் தொடர்பாக கவனத்தில் கொள்ளல் வேண்டும். காலநீடிப்பை செய்யும் அங்கீகாரம் பெற்றுக் கொண்டு திட்டமிடப்பட்ட காலத்தில் பூர்த்தி செய்வதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். |

இதுவரை தேசிய பொருளாதாரத்திற்கு எந்தவொரு பங்களிப்பையும் வழங்கியிருக்கவில்லை.

மூலம் ஆரம்பிக்கப்பட்டிருந்தது. அதற்கு இணையாக காணிகளை கைப்பற்றுதல் மற்றும் சுற்றாடல் அபிவிருத்தி நடவடிக்கைகளும் ஆரம்பிக்கப்பட்டிருந்தது. 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளின் போது காணி கைப்பற்றல் சதவீதம் 95 ஆகவும் அளவிடை மற்றும் ஆய்வுகள் 100 சதவீதமும் மற்றும் பிரதான மதிப்பீட்டில் 4 சதவீதத்திற்கு மேற்பட்ட உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்தலும் ஆக செயற்திட்டத்தின் ஆரம்ப செயற்பாடுகள் யாவும் பூர்த்தி செய்யப்பட்டு நிர்மாண மதிப்பீட்டில் 9 சதவீதத்திற்கு அண்ணளவான வேலைப்பகுதி பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. மேலும், அடிப்படை வேலைகளை ஆரம்பிப்பதற்கான நடவடிக்கைகள் வழங்கப்படுகின்றது.

ii. வினைத்திறனை மேம்படுத்துதல் மற்றும் நீர்ப்பாசன முறைமைகள் செயற்திறன் முகாமைத்துவ செயற்திட்டம்

-------------------------------------

நிதியேற்பாடு போதியளவு மற்றும் கட்டுநிதி அளவு கிடைக்காமையால் எதிர்பார்க்கப்பட்ட இலக்கினை அடைந்து கொள்வதற்கு முடியாதிருந்தது. இதனால் ஒட்டுமொத்த பௌதீக செயல் முன்னேற்றம் 12.16 சதவீதத்திற்கு வரையறுக்கப் பட்டிருந்தது.

(ஆ) **கிங் நில்வளா திருப்பும் செயற்திட்டம்**

| | | | |
|---|---|---|---|
| (i) | கிங் நில்வளா திருப்பும் செயற்திட்டத்தை அமுல்படுத்துவதற்காக 2014 நவம்பர் 05 ஆந் திகதி நீர்ப்பாசன மற்றும் நீர்வளங்கள் முகாமைத்துவ அமைச்சு மற்றும் சீனாவின் கெம்ரிவ் CAMEC IUD உடன் அ.டொலர் 690,000,000 தொகை EPC ஒப்பந்த உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்தது. அதற்காக வேலை முற்பணமாக ஒப்பந்த பெறுமதியில் 4.35 சதவீதமான அ.டொலர் 29,989,000 தொகை (ரூபா 4,011,054,982) செலுத்தப்பட்டிருந்தது. இந்த செயற்திட்டத்திற்குரிய EPC உடன்படிக்கையின் ஐந்தாவது பிரிவின் பிரகாரம் அந்த உடன்படிக்கை அமுல்படும் நிலைக்கு கொண்டுவருவதாயின் அதன் பிரிவின் கீழ் உள்ள விடயங்கள் யாவும் முழுமைப்படுத்தப்பட வேண்டியிருந்தமை மற்றும் உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்ட திகதி முதல் ஒரு ஆண்டிற்குள் செயற்திட்டத்தை அமுல்படுத்தும் நிலைமைக்கு உட்படாத சந்தர்ப்பத்தின் போது இரு தரப்பினரதும் இணக்கப்பாடின்றி உடன்படிக்கை இரத்துச் செய்யப்படல் வேண்டும். அதன் பிரகாரம் 2015 நவம்பர் 05 ஆந் திகதியில் உள்ளவாறு உடன்படிக்கை இரத்துச் செய்யப்பட்டிருந்தது. | இதன் போது 2015.05.28 ஆந் திகதிய பிரதமரின் செயலாளரால் வழங்கப்பட்ட ஆலோசனையின் பிரகாரம் கோரப்படாத நேரடியான செயற்திட்டங்கள் தற்காலிகமாக கைவிடுவதற்கு ஆலோசனை வழங்கப்பட்டிருந்ததுடன் அதன் பிரகாரம் கிங்நில்வளா திருப்பும் செயற்திட்டத்தின் பிணைமுறி பணமாக்குவதற்கான ஒப்பந்தக்காரருக்கு அறிவிக்கப்பட்டிருந்தது. எனினும் அதன் பின்னர் ஏற்பட்ட அமைச்சின் விடயப் பரப்பில் மாற்றம் ஏற்பட்ட பின்னர் மற்றும் அம்பாந்தோட்டை கைத்தொழில் புறத்தை சார்ந்த அபிவிருத்தி முன்மொழிவுகளை முன்கொண்டு செல்வதுடன் செயற்திட்டத்தை கைவிடாமல் முன்கொண்டு செல்ல வேண்டும் என ஆலோசனை வழங்கப்பட்டிருந்தமையை குறிப்பிடுகின்றோம்.<br><br>செயற்திட்டத்தில் காணப்படுகின்ற முக்கியமான தன்மை மற்றும் அதற்கான அரசியல் அதிகாரத்தினால் வழங்கப்பட்ட ஆலோசனையின் அடிப்படையில் செயற்திட்டத்தின் நடவடிக்கைகளை முன்கொண்டு செல்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தமையை குறிப்பிடுகின்றோம். | உடன்படிக்கையின் நிபந்தனைகளை அமுல்படுத்தாமை தொடர்பாக பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தர் கள் தொடர்பாக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

(ii) முற்பண பிணைமுறியை பணமாக்குவதற்கான இயலுமை தொடர்பாக பொருளாதார அலுவல்கள் தொடர்பான அமைச்சின் உப குழுவின் தீர்மானத்தின் பிரகாரம் பிரதமரின் செயலாளரால் வழங்கப்பட்ட ஆலோசனையின் படி உடனடியாக செயற்திட்டத்தின் நடவடிக்கைகள் நிறுத்தப்பட்டு சட்டமா அதிபரின் கருத்துரையும் பெறப்படாமல் மற்றும் அமைச்சரவையின் அங்கீகாரமுமின்றி உரிய முற்பணத் தொகை செயற்திட்டத்தின் முதலாவது கட்டமாக பெயர் குறிப்பிடப்பட்ட ஆரம்ப தகவல்களை சேகரித்தல், அளவிடல் நடவடிக்கைகள், பூகோள ரீதியான அவதானிப்பு செயற்பாடுகள், சாத்தியவள ஆய்வு அறிக்கையை நாளதுவரையாக்குதல் மற்றும் ஆரம்ப திட்டம் தயாரித்தல் போன்ற செயற்பாடுகளுக்கான கிரயமாக இனங்காணப்பட்டு அவை 08 மாதங்களில் பூர்த்தி செய்வதற்காக 2017 சனவரி 20 ஆந் திகதி நீர்ப்பாசன அமைச்சின் செயலாளரினால் புரிந்துணர்வு உடன்படிக்கை தயாரிக்கப்பட்டிருந்தது. அதன் கீழ் இனங்காணப்பட்ட வேலைப்பகுதிகளுக்குரிய மொத்த தொகையும் ஒரே தடவையில் செலுத்தியிருக்கும் போது 05 வருடங்கள் கடந்திருந்த போதும் செயற்திட்டத்தின் ஆரம்ப திட்டம் தயாரித்தல் இதுவரை பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. பௌதீக செயலாற்றல் அறிக்கையின் படி அந்த கிங் நில்வளா திருப்பும் செயற்திட்டத்தில் 05 பிரதான ஆற்று படுக்கைகள் நேரடியாக தொடர்புபடுகின்ற செயற்திட்டங்களாக இருந்ததுடன் அதற்கு முன்னர் அமுல்படுத்தப்பட்ட மகாவலி பெரிய திட்டம் மாத்திரம் இரண்டாவது நீர் வளங்கள் அபிவிருத்தி செயற்திட்டமாகும். இவ்வாறான செயற்திட்டத்தின் சாத்தியவள ஆய்வு மிகவும் சிக்கலானதாக இருந்ததுடன் இதற்காக தாக்கமளித்த சமூக அரசியல் மற்றும் சுற்றாடல் விடயங்களுக்கிடையே மிகவும் சிக்கலாக இருந்தது. அதன் பிரகாரம் உடன்படிக்கை செய்யப்பட்ட நிபந்தனையின் பிரகாரம் 09 மாதங்களின் போது செயற்திட்டத்தின் கட்டம் I பூர்த்தி செய்வதற்கு தீர்மானிக்கப்பட்ட போதிலும் மேற்குறிப்பிடப்பட்ட ஒப்பந்தக் காரரினதும் செயற்திட்ட முகாமைத்துவ அலகினதும் கட்டுப்பாட்டிற்கு பறம்பான விடயங்களின் காரணமாக அந்த செயற்பாடுகளை பூர்த்தி செய்தல் இதுவரையிலும் தாமதமடைந்திருந்தது.

அமைச்சரவை உப குழுவின் தீர்மானத்தின் படி சட்டமா அதிபரின் ஆலோசனையை பெறாமல் நடவடிக்கை எடுத்த பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தர் கள் தொடர்பாக முறையாக நடவடிக்கை எடுத்தல் வேண்டும்

| | | | |
|---|---|---|---|
| | செயற்பாடுகளில் 26 சதவீதம் மேலும் பூர்த்தி செய்யப்பட வேண்டிக் காணப்பட்டது. | | |
| (iii) | அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் வன பாதுகாப்புத் திணைக்களத்தின் இணக்கப்பாடு மற்றும் அனுசரணையை பெற வேண்டியிருந்தமை குறிப்பிட்டு 04 வருடங்கள் கடந்திருந்த போதிலும் அது பெறப்படாதிருக்கும் போது செயற்திட்டத்தின் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தது. மேலும் செயற்திட்டத்திற்காக சேர்க்கப்பட்ட பதவியணியினருக்கான சம்பளம் மற்றும் படிகள் மற்றும் ஏனைய செலவினங்களுக்காக 05 வருட கால எல்லையில் ரூபா 57 மில்லியன் செலவிடுவதற்கு ஏற்பட்டிருந்தது. செயற்திட்டத்தின் நடவடிக்கைகள் 08 வருடங்கள் தொடர்ச்சியாக தாமதமடைந்ததன் மூலம் அது சிக்கனமற்ற மற்றும் மேலதிக செலவின பொறுப்பை ஏற்படுத்தியிருந்தது. | வன பாதுகாப்புத் திணைக்களத்தின் அனுமதியை பெற்றுக் கொள்வதற்கு பல சந்தர்ப்பங்களின் போது முயற்சி எடுக்கப்பட்டதுடன் இது தொடர்பாக அமைச்சரவை உறுப்பு ஊடாகவும் விடயங்கள் சமர்ப்பிக்கப்பட்ட போதும் அந்த ஒவ்வொரு சந்தர்ப்பத்தின் போதும் வனபாதுகாப்பு உத்தியோகத்தர்கள் மற்றும் கலந்துரையாடப்பட்ட பொருத்தமான தீர்மானங்களை எடுக்குமாறு ஆலோசனை வழங்கப்பட்டிருந்தது. செயற்திட்டத்தில் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் 15 ஆக இருந்த போதிலும் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அந்த மொத்த பதவியணியினரையும் சேர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை.<br><br>மேலும் இயலுமான சகல சந்தர்ப்பங்களிலும் ஆகக் குறைந்த பதவியணியினர் ஊடாக செயற்திட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் அதன் மூலம் 2017 முதல் இது வரை பதவியணியினருக்காக செலுத்தப்பட்ட சம்பளம் ரூபா 27 மில்லியன் அளவில் வரையறுப்பதற்கு முடியுமாக இருந்தது | செயற்திட்டத்தை ஆரம்பிப்பதற்காக முற்பணத்தை விடுவிப்பதற்கு முன் சுற்றாடல் மதிப்பீடு மற்றும் சாத்திய வள ஆய்வு மேற்கொண்டு உரிய வரிசை நிறுவனங்களின் அங்கீகாரத்தை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்காமை தொடர்பாகவும் அதன் மூலம் ஏற்பட்டிருந்த நிலைமை தொடர்பாகவும் பொறுப்பு வாய்ந்த தரப்பினர் தொடர்பாக முறையான நடவடிக்கைகளை எடுத்தல் வேண்டும். |
| (iv) | பிரதமரின் செயலாளரின் 2016.06.23 ஆந் திகதிய PMO/01/ASP/2016/01(VoI II) ஆம் இலக்க கடிதத்தின் மூலம் பொருளாதார | நில்வளா திருப்பும் செயற்திட்டத்தின் பிரதான நோக்கம் கிங் மற்றும் நில்வளா என்ற ஆற்றுப்படுக்கையின் இரு மருங்கிலும் காணப்படுகின்ற நீர்த்தேக்கத்தை நீண்ட தூரம் | பொருளாதார முகாமைத்துவம் தொடர்பான உப குழுவினால் இந்த செயற்திட்டம் நில்வளா கங்கை சார்ந்த |

முகாமைத்துவம் தொடர்பான உப குழுவினால் இந்த செயற்திட்டம் நில்வளா கங்கையினை அண்மித்ததாக மாத்திரம் மேற்கொள்வதற்கு பரிந்துரை செய்யப்பட்டிருந்தமையும் அதன் பிரகாரம் அமைச்சரவைக் குறிப்பொன்று சமர்ப்பிக்குமாறும் ஆலோசனை வழங்கப்பட்டிருந்த போதிலும் அந்த அமைச்சரவை குறிப்பு சமர்ப்பிக்காமல் 2017.07.20 ஆந் திகதி உடன்படிக்கையில் கைச்சாத்திடப்பட்டிருந்தது. அதன் மூலம் கிங்கங்கை மற்றும் நிலவளா என்ற 02 பகுதிகள் தொடர்பாக ஆய்வினை செய்வதற்கு கையளிக்கப்பட்டிருந்தது. பரிந்துரையின் பிரகாரம் பொருளாதார முகாமைத்துவ உப குழுவின் மூலம் செயற்திட்டம் நில்வளா கங்கையை அண்மித்ததாக மாத்திரம் மேற்கொள்வதற்கு வழங்கப்பட்ட பரிந்துரையை கவனத்தில் கொள்ளாமல் கைச்சாத்திடப்பட்ட உடன்படிக்கையின் மூலம் UNESCO அமைப்பினால் உலக மரபுரிமையாக வெளியிடுவதற்குள்ள கிங்கங்கை சார்ந்த மற்றும் நில்வளா கங்கை என்ற 02 பகுதிகளுக்காகவும் செயற்திட்டத்தை அமுல்படுத்துவதற்கு திட்டத்தை தயாரிப்பதற்காக ஒப்பந்தகார நிறுவனத்துடன் உடன்படிக்கைக்கு வந்திருந்தது. அதனால் இந்த செயற்திட்டத்திற்குரிய வன பாதுகாப்புத் திணைக்களத்தை உள்ளடக்கிய ஏனைய நிறுவனங்களின் உலர்ந்த வலயங்களுக்கு திருப்புவதாக இருந்ததுடன் அதன் மூலம் அதிக நீர் அளவினை கொள்ள முடியுமாக கிங்கங்கை நீர்த்தேக்கம் உள்ளது. அதாவது வருடாந்தம் திருப்பி அனுப்புவதற்கு எதிர்பார்க்கப்பட்ட கனமீற்றர் 300 மில்லியன் அளவிலான கனமீற்றரில் 200 மில்லியன் கனமீற்றர் கிங்கங்கை சார்ந்த பகுதியில் பெறப்பட்ட நீராக இருந்ததுடன் நில்வளா கங்கையில் பெறப்பட்ட நீர் அளவு ஒப்பீட்டு ரீதியில் குறைவான பெறுமதியைக் கொண்டிருந்தது. அதனால் நில்வளா கங்கை பிரதேசத்தில் நீர் மாத்திரம் திருப்பியனுப்புவதில் எந்தவொரு வகையிலும் போதுமானதாக இல்லாதிருந்ததுடன் அதற்காகவும் கவனத்தில் கொள்ளக் கூடிய கிரயமொன்றை செலவிட வேண்டியேற்பட்டமையால் நில்வளா கங்கை சார்ந்த பிரதேசத்தில் மாத்திரம் செயற்திட்டத்தை அமுல்படுத்துதல் தொழில்நுட்ப மற்றும் பொருளாதார ரீதியில் சாத்தியவளமாக மிகக் குறைந்த செயற்திட்டமாக இருந்தது. அதன் காரணமாக கிங் மற்றும் நில்வளா என்ற கங்கை சார்ந்த இரண்டு பிரதேசங்களிலும் ஆய்வு நடவடிக்கைகள் உரிய கம்பனிகளுக்கு கையளிக்கப்பட்டிருந்தது. காணப்பட்ட பொருளாதார சமூக மற்றும் அரசியல் நிலைமையின் அடிப்படையில் இந்த சந்தர்ப்பங்களின் போது செயற்திட்டத்தை அமுல்படுத்துதல் தாமதமான போதிலும் இவ்வாறான செயற்திட்டமொன்றின் ஆய்வு நடவடிக்கைகளுக்காக செலவிடப்பட்ட செலவினம் எதிர்காலத்தில் மிகவும் பிரயோசனமாக இருக்கும். பிரதேசத்தில் மாத்திரம் மேற்கொள்வதற்கும் அமைச்சரவை குறிப்பு சமர்ப்பிக்குமாறும் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரையை கவனத்தில் கொள்ளாமல் தரப்பினர் தொடர்பாக கண்டறிந்து முறையான நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்வதற்கு முடியாதிருந்தமை மற்றும் பொதுமக்களின் எதிர்ப்பு மேலிழந்தமை போன்ற நிலைமை உருவாகியிருந்தது. அது தொடர்பாக அமைச்சரவை குறிப்பிலும் வெளிப்படுத்தப்பட்டிருந்தது.

அதன் பிரகாரம் 2017 ஆம் ஆண்டில் முறையற்ற வகையில் கைச்சாத்திடப்பட்ட புரிந்துணர்வு உடன்படிக்கையின் கீழ் மேற்கொள்ளப்படுகின்ற ஆய்வுகள் மற்றும் திட்டங்களும் பிரயோசனமற்றதாக இருந்தமை அவதானிக்கப்பட்டது.

(இ) **உமா ஓயா பல்நோக்கு அபிவிருத்தி செயற்திட்டம்**

---------------------------------------------------------------------------------------------

உமா ஓயா பல்நோக்கு அபிவிருத்தி செயற்திட்டத்திற்காக திருத்தப்பட்ட மொத்த கிரய மதிப்பீடு ஆரம்ப வேலைகளுக்காக அமெரிக்க டொலர் மில்லியன் 529.06 அதாவது ரூபா 76,325.75 மில்லியன் மற்றும் ஏனைய கிரயம் மற்றும் கங்கை கீழ்ப் பிரதேச அபிவிருத்திக்காக ரூபா 15,474.25 மில்லியன் நிதியம் நிதியீட்டம் செய்வதற்கு எதிர்பார்க்கப்பட்டிருந்தது. செயற்திட்டத்திற்காக 2020 ஆம் ஆண்டின் இறுதி வரையிலும் ஆரம்ப வேலைகளுக்காக உள்நாட்டு நிதியம் ரூபா 72,153.17 மில்லியன் மற்றும் வெளிநாட்டு நிதியம் ரூபா 6,522.85 மில்லியன் ஆக ரூபா 78,676.02 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. இந்த செயற்திட்டம் 2008 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டு 07 வருடங்களில் அதாவது 2015 நவம்பர் 15 ஆந் திகதி பூர்த்தி செய்வதற்குள எதிர்பார்க்கப்பட்ட போதிலும் 2021 திசெம்பர் 25 ஆந் திகதி வரையான காலம் நீடிக்கப்பட்டிருந்தது. பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | செயற்திட்டத்திற்காக நிதியம் ஈரான் ஏற்றுமதி அபிவிருத்தி வங்கியின் மூலம் நிதியீட்டம் செய்வதன் கீழ் போட்டியாளர் கூறுவிலைகள் கோரப்படாமல் அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் ஒப்பந்தக்காரர் தெரிவு செய்யப்பட்டு 2007 நவம்பர் 27 ஆந் திகதி | ஈரான் ஏற்றுமதி அபிவிருத்தி வங்கி (EDBI) இனால் செயற்திட்டத்திற்காக வெளிநாட்டு கடன் பணத்தை பெற்றுக் கொள்வதற்கு இணங்கியிருந்த போதிலும் 2013 ஆம் ஆண்டின் போது ஈரான் அரசாங்கத்திற்கு கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டமையால் ஈரான் மற்றும் இலங்கைக்கிடையே வங்கி கொடுக்கல் வாங்கல்களை நிறுத்த | சர்வதேச போட்டியாளர் கூறுவிலைகள் கோருவதன் மூலம் இலங்கை அரசாங்கத்திற்கு பெறக்கூடியதாக விருந்த போட்டியாளர் நலன்கள் தொடர்பாக மதிப்பீடு செய்து அமைச்சரவைக்கு |

உடன்படிக்கையில் கைச்சாத்திடப்பட்டிருந்தது. எனினும் 2013 ஆம் ஆண்டின் போது ஈரானுக்கு விதிக்கப்பட்ட பொருளாதார கட்டுப்பாட்டின் காரணமாக ஈரான் ஏற்றுமதி அபிவிருத்தி வங்கியினால் கையளிக்கப்பட்ட வெளிநாட்டுக் கடன் நிதி கைவிடப்பட்டிருந்தது. அதன் காரமணாக இந்த செயற்திட்டத்தின் கிரயம் இலங்கை அரசாங்கத்தின் நிதியத்தின் மூலம் நிதியீட்டம் செய்யப்பட்டிருந்தது. அந்த நிலைமையின் பிரகாரம் உள்நாட்டு நிதியம் மூலம் செயற்திட்டத்தை முன்கொண்டு செல்தல் தொடர்பாக தீர்மானம் எடுக்கும் போது சர்வதேச போட்டியாளர் கூறுவிலை கோருவதன் மூலம் இலங்கை அரசாங்கத்துக்கு பெற கூடியதாக இருந்த போட்டி நலன்கள் தொடர்பான மதிப்பீடு மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை.

வேண்டியிருந்ததுடன் அதற்கு இணையாக ஈரான் ஏற்றுமதி அபிவிருத்தி வங்கியின் நிதி வசதிகளும் நிறுத்தப்பட்டிருந்தது. அதுவரையில் இலங்கை அரசாங்கத்தின் ஒப்பந்தக்காரருக்கு செலுத்தப்பட்ட முற்பணத் தொகையான அ.டொலர் 77,107,880 தொகைக்கு மேலதிகமாக ஒப்பந்தக் காரரினால் செலவிடப்பட்ட வேலைக்காக ஈரான் ஏற்றுமதி அபிவிருத்தி வங்கி ஊடாக அ.டொலர் 50,619,304 தொகை செலுத்தப்பட்டிருந்தது. புகுல்கொள நீர்த்தேக்கத்தை நிர்மாணிக்கும் நடவடிக்கைகளை தடுக்கும் போது ஏனைய சகல நிர்மாணங்களும் ஆரம்பிக்கப்பட்டிருந்தது. அதற்கு மேலதிகமாக சுரங்கம் அகழ்வு இயந்திரம் இரண்டு மற்றும் நிர்மாணத்திற்கு தேவையான ஏனைய இயந்திர பொறிமுறைகள் மற்றும் வாகனங்களும் கொண்டு வரப்பட்டிருந்தன. ஒப்பந்தக்காரருக்கு அறிவித்து இலங்கை அரசாங்கத்தின் நிதியேற்பாட்டின் அடிப்படையில் செயற்திட்டம் செய்யப்பட்டிருந்தது.

EDBI மூலம் கிடைக்க வேண்டிய நிதி வசதிகள் கிடைக்காத சந்தர்ப்பத்தின் போது செயற்திட்டம் அந்த ஒப்பந்தக் கம்பனியிலிருந்து பூர்த்தி செய்து மீண்டும் சர்வதேச போட்டியாளர் கூறுவிலைகளை கோருவதன் மூலம் சேவை வழங்குனருக்கு நலன்களை பெற்றுக் கொள்ளுதல் மேலும் தாமதமடைந்திருந்ததுடன் அவ்வாறான தீர்மானம் எடுக்கப்படுமாயின் கணிசமான மேலதிக கிரயமொன்றை செய்வதற்கு

அறிக்கையிடு வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

| | | | |
|---|---|---|---|
| | | ஏற்பட்டுள்ளது. மேலும் அவ்வாறான தீர்மானத்தை அமுல்படுத்துவதன் மூலம் நடைமுறை ரீதியிலான பிரச்சினைகளில் அதிகமான சேவை வழங்குனருக்கு முகங்கொடுக்க வேண்டியேற்பட்டுள்ளது. | |
| (ii) | செயற்திட்டத்தின் தாமதத்தின் காரணமாக எதிர்பார்க்கப்பட்ட பிரதி பலன்களான மின்வலுவை உற்பத்தி செய்யும் முறைமைக்கு மேலதிகமாக மொனராகலை மாவட்டத்தில் வெல்லவாய மற்றும் தனமல்வில பிரதேச செயலக பிரிவுகளில் அமைந்துள்ள புதிய காணி 4,500 ஹெக்டயர் மற்றும் தற்போது பயிர் செய்யப்படுகின்ற காணி 1,500 ஹெக்டயர் இற்காக நீர்ப்பாசன நீரை வழங்குதல், செயற்திட்ட பிரதேசத்தில் குடிநீர் மற்றும் கைத்தொழில்களுக்காக வருடாந்தம் 30 மில்லியன் நீரை வழங்குதல் மற்றும் டயபரா மற்றும் உகுல்பொல இல் நிர்மாணிக்கப்படுகின்ற நீர்த்தேக்கத்தின் மூலம் பதுளை மாவட்டத்தின் பண்டாரவளை மற்றும் எற்றன்பிட்டிய பிரதேசங்களில் குடிநீர் தேவையினை வழங்குதல் போன்ற செயற்திட்ட நோக்கங்களை நிறைவேற்றுவதற்கு முடியாதிருந்தது. | கீழ் பள்ளத்தாக்கு அபிவிருத்தி நடவடிக்கையின் கீழ் அலிகொட்டஆர நீர்த்தேக்கத்தை நிர்மாணித்தல் முதல் சிறிய 100 குளங்களை மறுசீமைப்பதற்காக காண்பிக்கப்பட்ட 06 கூறுகளை உள்ளடக்கி நீர்ப்பாசனத் திணைக்களத்தினால் நீர் பகிந்தளிப்பதற்காக நிர்மாணிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்ற நீர்த்தேக்கம், எலவேலி மற்றும் வாய்க்கால் மற்றும் குளம் புனரமைத்தல் செயற்பாடுகள் தொடர்ந்தும் மேற்கொள்ளப்படுகின்றது. 2022 திசெம்பர் மாத இறுதிக்கு முன்னர் சகல வேலை நடவடிக்கைகளை பூர்த்தி செய்து, பிரதான நீர்ப்பாசன நீர்த்தேக்கம், டயபார மற்றும் உகுல்பொல என்ற 02 நீர்த்தேக்கங்களிலிருந்து விநியோகிக்கப்படுகின்ற நீரை பெற்றுக் கொள்வதற்கு திட்டமிடப்பட்டிருந்தது. அவ்வாறே, எம்பிலிபிட்டிய நீர் உத்தேச திட்டத்தின் மூலம் உகுல்பொல நீர்த்தேக்கத்தின் நீர், எத்தலபிட்டி, அமுனுதோவ, குறுக்குதேகம மற்றும் வராக்கதண்ட என்ற பிரதேசங்களுக்கு 2019 ஆம் ஆண்டு முதல் வழங்கப்படுகின்றது. பண்டாரவளை, தியத்தலாவ மற்றும் ஹப்புத்தளை கூட்டிணைந்த நீர் உத்தேச திட்டத்தை நிர்மாணிக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதுடன் இதற்காக தேவையான நீரை | செயற்திட்டம் தாமதமடைந்ததன் காரணமாக எதிர்பார்க்கப்பட்ட நலன்களுக்கான தாக்கங்களை மதிப்பீடு செய்து அமைச்சரவைக்கு அறிக்கையிடுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | வழங்குவதற்காக டயபரா நீர்த்தேக்க நீர் மூலமாக பயன்படுத்தப்படுவதுடன் அதற்காக கட்டமைப்பை நிர்மாணிக்கும் நடவடிக்கைகள் இறுதிக் கட்டத்தில் காணப்படுகின்றது. நீர்த்தேக்கத்தை நிரப்புவதற்கு (திசெம்பர் 31 இற்கு) முன்னர் சகல நிர்மாண நடவடிக்கைகளை பூர்த்தி செய்வதற்கு நீர் வழங்கல் மற்றும் நீர் வடிகாலமைப்புச் சபை நடவடிக்கை எடுக்கின்றது. | |
| (iii) | இதற்காக செயற்திட்ட முகாமைத்துவ அலகின் மூலம் பரிந்துரை சமர்ப்பிக்கும் போது EPC ஒப்பந்த உடன்படிக்கையின் ஏற்பாட்டின் பிரகாரம் அறவிடப்பட்ட தாமதக் கட்டணத்தை மீண்டும் செலுத்துவதன் மூலம் காலத்தை நீடிப்பதற்கு அங்கீகரிக்கப்பட்ட கால எல்லைக்குரிய ஒப்பந்தக் காரருக்கு செலுத்துவதற்கு ஏற்படுகின்ற கடப்பாட்டு தாக்கங்கள் தொடர்பாக உரிய அமைச்சுக்கு அறிவிக்கப்பட்டிருக்க வில்லை. | - மேற்படி - | - மேற்படி - |
| (iv) | உமா ஓயா பல்நோக்கு அபிவிருத்தி செயற்திட்டத்தின் பிரதான சுரங்கத்தில் உள்ள நீர்க்கசிவின் காரணமாக ஒப்பந்தக்காரரால் செலுத்த வேண்டிய இழப்பீட்டிற்காக 2021 ஆகஸ்ட் 31 ஆந் திகதி வரையில் அரசாங்கத்தின் நிதியத்திலிருந்து ரூபா 1,931,346,396 தொகை செலுத்தப்பட்டிருந்தது. | 2019 ஏப்ரல் வரையிலும் இழப்பீடு செலுத்தப்பட்ட தொகையில் பராக் கம்பனியிலிருந்து அறவிடுவதற்கு எஞ்சியிருந்த தொகையான ரூபா 584,813,829.83 தொகை சமமான 06 தவணைகளில் பராக் கம்பனிக்கு செலுத்தப்பட்ட பற்றுச்சீட்டுக்களிலிருந்து அறவிடுவதற்கு பரிந்துரை செய்யப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் பராக் கம்பனி சமர்ப்பித்த 95 ஆவது பட்டியலில் முதலாவது தவணையான ரூபா 96,196,400 தொகை அறவிடப்பட்டுள்ளது. | இழப்பீட்டிற்காக செலுத்தப்பட்டுள்ள பணம் அதற்குரிய வட்டித் தொகையுடன் ஒப்பந்தக் காரரிடமிருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (v) | 2015 நவம்பர் 15 ஆந் திகதி முதல் 2021 திசெம்பர் 25 வரை செயற்திட்டக் காலம் நீடிக்கப்பட்டிருந்ததுடன் EPC ஒப்பந்த உடன்படிக்கையும் 8.7 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கு இணங்க தினமொன்றிற்கு ஒப்பந்த பெறுமதியில் 0.01 சதவீதமாக ஆகக்கூடியது 5 சதவீதம் வரை அறவிட முடியுமாக இருந்த தாமதக் கட்டணம் அமெரிக்க டொலர் 26.453 மில்லியன் அறவிடப்பட்டிருக்கவில்லை. | கணக்காய்வு அறிக்கையில் காண்பிக்கப்படுகின்ற பிரகாரம் தாமதக் கட்டணமாக அமெரிக்க டொலர் 6,631,364 அறவிடப்பட்டுள்ளது. தாமதக் கட்டணத்தை அறவிடுதல் தொடர்பாக பராக் கம்பனிக்கு அறிவித்ததன் பின்னர் பராக் கம்பனியின் 33 ஆவது பட்டியல் முதல் தாமதக் கட்டணம் அறவிடல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.<br><br>அதன் பின்னர் தாமதக் கட்டணத்தை அறவிடல் தொடர்ந்தும் தீர்மானிக்கப்படும் வரை தற்காலிகமாக நிறுத்துவதற்கு முன்னாள் இருந்த சனாதிபதி அவர்களின் கட்டளை விறியோகிக்கப்பட்டிருந்த மையால் பராக் கம்பனியின் 40 ஆவது பட்டியிலிருந்து தாமதக் கட்டணம் அறவிட்டதன் பின்னர் தாமதக் கட்டணத்தை அறவிடுதல் நிறுத்தப்பட்டிருந்தது. அது வரையில் தாமதக் கட்டணமாக அறவிடப்பட்ட மொத்த அமெரிக்க டொலர் 6,631,364 ஆகும். | உடன்படிக்கையின் நிபந்தனைகளின் பிரகாரம் தாமதக் கட்டணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியிருந்த துடன் அறவிடப்பட்ட தாமதக் கட்டணத்தை மீண்டும் செலுத்துதல் தொடர்பாக உரிய தரப்பினருக்கு அறிவித்து மீண்டும் அறவிடுவதற்கு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படல் வேண்டும். |
| (vi) | ஒப்பந்தகாரரிடமிருந்து தாமதக் கட்டணமாக அறவிடப்பட்ட அமெரிக்க டொலர் 6,631,364 தொகையில் அமைச்சரவை தீர்மானத்தின் படி அதில் அமெரிக்க டொலர் 5,305,091 மீள செலுத்தப்பட்டிருந்தது. | அறவிடப்பட்ட தாமதக் கட்டணத்தை பராக் கம்பனிக்கு செலுத்துவதற்குள்ள இயலுமையை கண்டறிவதற்காக நியமிக்கப்பட்ட குழு அறிக்கையின் படி அறவிடப்பட்ட தாமதக் கட்டணங்களில் 80 சதவீதத்தை செலுத்துவதற்கு அமைச்சரவை அங்கீகாரம் கிடைத்திருந்தது. செயற்திட்டக் காலத்தை நீடிப்பதற்காக செயற்திட்டம் மூலம் அமைச்சரவைக்கு பரிந்துரை சமர்ப்பிக்கப்பட்ட சகல சந்தர்ப்பங்களிலும் மீண்டும் தாமதக் கட்டணத்தை அறவிடுவதை ஆரம்பிப்பதற்காக மற்றும் பராக் கம்பனிக்கு மீண்டும் செலுத்தப்பட்ட தாமதக் | - மேற்படி - |

| | | | |
|---|---|---|---|
| | | கட்டணத்தை மீள அறவிடுவதற்கு பரிந்துரை செய்யப்பட்டிருந்தது. | |
| (vii) | இழப்பீடாக இலங்கை அரசாங்கத்தினால் செலுத்தப்பட்ட ரூபா 889,789,252 தொகையை ஒப்பந்தக்காரரிடமிருந்து அறவிடப்படாதிருந்ததுடன் ஒப்பந்தத்திற்குரிய காப்புறுதி கம்பனியிலிருந்து அறவிடப்பட்ட அமெரிக்க டொலர் 8,155,981 இழப்பீடாக பெறப்பட்டிருந்தது. | 2019 ஏப்ரல் வரையிலும் இழப்பீடாக செலுத்தப்பட்ட தொகையில் பராப் கம்பனியிலிருந்து அறவிடுவதற்கு எஞ்சியிருந்த தொகையான ரூபா 584,813,829 தொகை சமமான 06 தவணைகளில் பராக் கம்பனிக்கு செலுத்துகின்ற பட்டியல்களிலிருந்து அறவிடுவதற்கு பரிந்துரை செய்யப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் பராப் கம்பனி சமர்ப்பித்த 95 ஆவது பட்டியலில் முதலாவது தவணையான ரூபா 96,196,400 தொகை அறவிடப்பட்டுள்ளது. | இழப்பீடாக இலங்கை அரசாங்கம் செலுத்திய தொகையை தாமதமின்றி அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (viii) | ஒப்பந்தகாரரால் காலம் நீடிக்கப்பட்ட கால எல்லைக்காக மேலதிக செலவினம் மற்றும் பட்டியல்களுக்காக செலுத்துதல் தாமதம் அடைந்தமையால் அமெரிக்க டொலர் 181,337,171 மேலதிக கட்டணம் கோரப்பட்டிருந்தது. EPC ஒப்பந்த உடன்படிக்கையின் படி அந்த கோரிக்கை முறையாக நிராகரிக்கப்பட்டு அது தொடர்பான கொள்கை வழங்கல் பிரிவிற்கு அறிவிப்பதற்கு செயற்திட்ட முகாமைத்துவ அலகு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. செயற்திட்டத்தின் மூலம் எதிர்பார்க்கப்பட்ட நலன்கள் 2022 மே வரையிலும் பெற்றுக் கொள்வதற்கு முடியுமாக இருந்தது. | செயற்திட்ட முகாமைத்துவ அலகினால் இந்த கோரிக்கை முறையாக நிராகரிக்கப்பட்டிருந்ததுடன் பராக் கம்பனி தாமதக் கட்டண உரித்தை கோரி அனுப்பி சகல சந்தர்ப்பங்களிலும் செயற்திட்ட முகாமைத்துவ அலகின் மூலம் அது ஆய்வு செய்யப்பட்டு சேவை வழங்குனரால் பட்டியல்கள் செலுத்துதல் தாமதமடைந்தமையால் பராப் கம்பனிக்கு தாமதக் கட்டணம் உரித்தை செலுத்துதல் தவிர அவர் கோரியிருந்த ஏனைய காரணங்களுக்காக தாமதக் கட்டணம் செலுத்த முடியாதிருந்ததாக எழுத்து மூலம் அறிவிக்கப்பட்டிருந்தது.<br><br>அதன் பிரகாரம் தாமதக் கட்டண உரித்தாக பராப் கம்பனி சமர்ப்பித்த ஐக்கிய அமெரிக்க டொலர் 181,337,171 உரித்து கட்டணம் தொடர்பாக ஆய்வு செய்து பரிந்துரை சமர்ப்பிப்பதற்கு கலந்துரையாடல் | EPC ஒப்பந்த உடன்படிக்கையின் பிரகாரம் அந்தக் கோரிக்கை முறையாக நிராகரிக்கப்பட்டு அது தொடர்பாக அமைச்சரவைக்கு அறிவித்தல் வேண்டும். உரிய தாமதப் பணத்தை செலுத்துவதற்கு முன்னர் காலத்தை நீடிப்பதற்குள்ள தாக்கங்களை உள்ளடக்கி ஏனைய உரித்துக்கள் மேற்கொள்ளாதிருப்பதற்கு ஒப்பந்தக் காரரின் இணக்கப்பாடு பெறப்படல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| | ஒன்றிணைந்த குழுவொன்று (CANC) அமைச்சரவை அங்கீகாரத்தின் பிரகாரம் நியமிக்கப் பட்டுள்ளதுடன் அந்தக் குழுவின் பரிந்துரையை கவனத்தில் கொண்டு ஐக்கிய அமெரிக்க டொலர் 38,612,000 தொகை மாத்திரம் உரிமைக் கட்டணமாக செலுத்துவதற்கு அமைச்சரவை பத்திரமொன்று சமர்ப்பிக்கப் பட்டுள்ளதுடன் அதற்காக அமைச்சரவை அங்கீகாரம் கிடைத்துள்ளது. | |

(ஈ) **நிலக்கீழ் நீர் கண்காணிப்பு தகவல் வலையமைப்பை தாபித்தல்**

சிறுநீரக நோயாளர்கள் கணிசமாக பரவியுள்ள அனுராதபுரம் மற்றும் பொலன்னறுவை போன்ற தெரிவு செய்யப்பட்ட சில மாவட்டங்களில் தீர்மானிக்கப்பட்ட செயற்திட்டமாக அமுல்படுத்துவதற்கான கிரயம் யூரோ 20,629,921.18 அதாவது ரூபா 3,628.39 மில்லியனின் கீழ் வெளிநாட்டு கம்பனியுடன் பொறியியலாளர், பெறுகைகள் மற்றும் நிர்மாணங்கள் (EPC) ஒப்பந்தமாக மேற்கூறப்பட்ட செயற்திட்டத்தை அமுல்படுத்துவதற்காக நீர்ப்பாசன மற்றும் நீர்வழங்கல் அமைச்சு செயலாளரினால் 2017 ஒக்தோபர் 03 ஆந் திகதி உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்தது. இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | இந்த செயற்திட்டத்தின் கீழ் தரவு நிலைய கட்டிடத்தை நிர்மாணிப்பதற்காக யூரோ 1,473,462 தொகை ஒதுக்கப்பட்டிருந்த போதிலும் 04 வருடங்கள் கடந்திருந்த போதிலும் நிர்மாண நடவடிக்கைகள் 2022 ஆகஸ்ட் வரையிலும் ஆரம்பிக்கப்பட்டிருக்க வில்லை. செயற்திட்டத்திற்காக வழங்கப்பட்ட 18 மாதம் தினங்கள் நீடித்தல் 2022 செப்தெம்பர் மாதம் 30 ஆந் திகதி முடிவடைவதற்கு இருக்கின்றயைால் செயற்திட்டத்தின் செயற்பாட்டு நடவடிக்கைகளுக்கு இணையாக தரவு நிலைய கட்டடிம் நிர்மாணிக்கப்படாமையால் | தரவு நிலைய கட்டிடத்திற்கு மேலதிகமாக நீர் வளங்கள் சபையின் பிரதான அலுவலகத்தை தாபிப்பதும் இந்தக் கட்டிடத்தில் 24,000 சதுரஅடி அளவில் திட்டமிடப்பட்டிருந்ததுடன் அதில் 18,000 சதுரஅடியின் நிர்மாண நடவடிக்கைகள் ஆரம்ப கட்டத்தின் கீழ் பூர்த்தி செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டமையால் மேலதிக நிதியேற்பாடு தேவைப்பட்டதன் காரணமாக எதிர்பாராத ஒதுக்கீடுகள் (Provisional sum) இன் கீழ் யூரோ 439,539 ஒதுக்கப்பட்டிருந்தது. திட்டமிடப்பட்டவைகள் யாவும் தற்போது நகர அபிவிருத்தி அதிகார சபைக்கு சமர்ப்பிக்கப்பட்ட போதும் சின்னக்கரை உடன்படிக்கை இதுவரையில் | தரவு நிலையத்தை நிர்மாணிப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டியிருந்த துடன் திட்டமிடப்பட்ட பிரகாரம் நடவடிக்கை எடுப்பது தொடர்பாக பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தர் கள் தொடர்பில் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | செயற்திட்டத்தின் அடிப்படை நோக்கம் மற்றும் எதிர்பார்க்கப்பட்ட நலன்களை பெற்றுக் கொள்ள முடியாதிருந்தது. | வழங்கப்பட்டிருக்கவில்லை. எனினும் தற்போது தரவு நிலையமொன்று இரத்மலானை செயற்திட்ட அலுவலகத்தில் தாபிக்கப்பட்டுள்ளமையால் செயற்திட்டத்தின் நோக்கங்களுக்கு எந்தவொரு பாதகமான தாக்கமும் ஏற்படாமல் இருந்ததை தயவுடன் அறியத் தருகின்றோம். | |
| (ii) | உடன்படிக்கையின் பிரகாரம் 03 வருட கால எல்லையில் பூர்த்தி செய்வதற்கு திட்டமிடப்பட்ட செயற்திட்டத்தின் காலநீடிப்பிற்காக செயற்திட்ட பணிப்பாளரால் பரிந்துரை சமர்ப்பிக்கப்பட்டிருக்கும் போது இது EPC/ Turnkey ஒப்பந்தமாக இருந்ததாக ஒப்பந்தக்காரருக்கு இந்த காலநீடிப்பிற்குரிய எந்தவொரு மேலதிக கிரயத்திற்காகவும் இடமளிக்கப்படாதிருந்தமை குறிப்பிடப்பட்டிருந்தது. எனினும் ஒப்பந்தக்காரரால் காலத்தை நீடிப்பதற்காக 2021 மார்ச் 11 ஆந் திகதி சமர்ப்பித்தல் கடிதத்தின் பிரகாரம் அவ்வாறு மேலதிக கிரயம் அறவிடப்படாதிருந்தமை குறிப்பிடப்பட்டிருக்கவில்லை உடன்படிக்கையின் 3.1.1 ஆம் பிரிவின் படி (PCC 3.1.1) அவ்வாறான இணக்கப்பாடொன்றை பெற்றுக் கொள்ளல் செயற்திட்டத்தின் பணிப்பாளரின் கடமையாக இருந்தமை குறிப்பிடத்தக்கது. அதன் பிரகாரம் எதிர்காலத்தில் ஒப்பந்தகாரரால் உடன்படிக்கைப் பிரகாரம் காலநீடிப்பு கால எல்லைக்காக மேலதிக பட்டியல்கள் சமர்ப்பித்து பிணக்குகள் தீர்க்கும் | செயல்திட்ட காலத்தை நீடிப்பதற்கான நடவடிக்கை 2021.03.28 ஆந் திகதி எடுக்கப்பட்டிருந்ததுடன் உடன்படிக்கையின் நிபந்தனையின் பிரகாரம் காலநீடிப்பிற்கு பதிலாக ஏதாவது மேலதிக பட்டியல்கள் சமர்ப்பிக்கப்படுமாயின் அத்திகதியிலிருந்து 28 நாட்களிற்குள் மேற்கொள்ளப்படல் வேண்டும். இதுவரை அவ்வாறான சமர்ப்பித்தல்கள் மேற்கொள்ளப்படவில்லை. மேலும் செயற்திட்டத்தின் நடவடிக்கைகள் இறுதிக் கட்டத்திற்கு வந்துள்ளமையல் மேலதிக பட்டியல்கள் சமர்ப்பிக்கும் தேவையொன்று எழுந்திருக்கவில்லை. | காலத்தை நீடிக்கும் போது அதற்கான நிபந்தனையை உள்ளடக்கும் வகையில் இணக்கப்பாட்டிற்கு உடன்படுவதற்கு தேவையான நடவடிக்கைகள் மேற்கொண்டு அதில் எழக்கூடிய எதிர்கால பாதகங்களை மாற்றியமைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

சபைக்கு அனுப்பப்படுமாயின் இலங்கை அரசாங்கத்திற்கு பாதகமான நிலைமை ஏற்படும் ஆபத்து காணப்பட்டது. அதன்படி அரசாங்கத்தின் உரித்தினை பாதுகாக்கும் வகையில் செயற்திட்ட முகாமைத்துவ நடவடிக்கைகள் மேற்கொள்ளப் படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

**3.2 நிதி விடுவிக்கப்பட்ட போதும் செயல்முன்னேற்றத்தை பெறாதிருந்த செயற்திட்டங்கள்**

2017 ஆம் ஆண்டு முதல் 2021 ஆம் ஆண்டு வரை வினைத்திறன் மேம்படுத்தல் மற்றும் நீர்ப்பாசன முறைமை செயற்திறன் தன்மையை விருத்தி செய்யும் செயற்திட்டம் ரூபா 18,500 மில்லியன் தொகையில் அமுல்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்தது. அதற்காக 2017 முதல் 2021 வரை ரூபா 2,528 மில்லியன் ஒதுக்கப்பட்டிருந்ததுடன் ரூபா 2,595 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | செயற்திட்டத்திற்கான அபிவிருத்தி தரப்பினரிடமிருந்து நிதியத்தை பெற்றுக் கொள்ளும் இயலுமை தொடர்பாக பரீட்சித்து பார்க்குமாறு ஆலோசனை வழங்கப்பட்டிருந்த போதிலும் அது தொடர்பாக வெளிநாட்டு வள திணைக்களம் உரிய தொடர்பினை மேற்கொண்டிருக்கவில்லை. உள்நாட்டு நிதியங்களிலிருந்து செயற்திட்டம் அமுல்படுத்தப்பட்டிருந்தது. | வெளிநாட்டு வள திணைக்களம் நிதியமைச்சின் தலைமையில் அபிவிருத்தி தரப்பினரிடமிருந்து நிதியினை பெற்றுக் கொள்ளும் இயலுமை தொடர்பாக கலந்துரையாடல் பல தடவைகள் நடாத்தப்பட்டிருந்ததுடன் வினைத்திறன் மேம்பாடு மற்றும் நீர்ப்பாசன முறைமை செயற்திறனை விருத்தி செய்யும் செயற்திட்ட புனரமைப்பு மற்றும் சமூக அடிப்படை நிகழ்ச்சித் திட்டங்களாக இருந்தமையால் இதற்காக உள்நாட்டு நிதியத்தை ஈடுபடுத்துதல் பொருத்தமாக இருந்தமை முன்மொழியப்பட்டதன் அடிப்படையில் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. | ஆலோசனைகளை அமுல்படுத்தும் செயல் முன்னேற்றம் தொடர்பாக பரீட்சிக்கப்படல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| (ஆ) செயற்திட்டத்தின் நடவடிக்கைகள் 2017 முதல் 2021 காலஎல்லையில் பூர்த்தி செய்வதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும் செயற்திட்டத்தின் செயல்முன்னேற்றம் 12 சதவீதமாக இருந்தது. அதில் நிதிசார் செயல்முன்னேற்றம் 8.6 சதவீதம் ஆகும். | செயற்திட்டத்தின் திட்டமிடல் நடவடிக்கைகள், மதிப்பீடு தயாரித்தல் போன்ற செயற்பாடுகள் பௌதீக செயல்முன்னேற்றத்தின் ஒரு பகுதியாக இருந்ததுடன் ஆய்வு ரீதியாக இல்லாமையால் நிதிசார் செயல்முன்னேற்றத்தை விட பௌதீக செயல்முன்னேற்றம் அதிகரித்த பெறுமதியைக் கொண்டிருந்தது. | திட்டமிடப்பட்ட பிரகாரம் பணிகளை பூர்த்தி செய்யும் போது தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். |

### 3.3 வருடாந்த செயலாற்றல் அறிக்கை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| (அ) செயலாற்றல் அறிக்கையின் 1.4 இன் கீழ் காண்பிக்கப்பட்ட அபிவிருத்தி குறிப்புக்கள் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் அங்கீகரிக்கப்பட்டிருக்க வில்லை. | பதிலளிக்கப்படவில்லை. | 2020 ஆகஸ்ட் 28 ஆந் திகதிய 2/2020 ஆம் இலக்க அரச நிதி சுற்றறிக்கையின் 10.2 ஆம் பந்தியின் பிரகாரம் அரச நிதி திணைக்களத்தால் விநியோகிக்கப்பட்ட வழிகாட்டிக் கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) 1.6 ஆம் பந்தியின் கீழ் மகாவலி அதிகார சபை அமைச்சிற்குரிய நிறுவனமாக வெளிப்படுத்தப்பட்டிருக்க வில்லை. | பதிலளிக்கப்படவில்லை. | - மேற்படி - |
| (இ) மகாவலி அதிகார சபையின் கீழ் வரையறுக்கப்பட்ட கம்பனியாக பதிவு செய்யப்பட்டிருந்த வரையறுக்கப்பட்ட மகாவலி ஆலோசனை சேவைகள் பணியகம் (தனியார்) கம்பனி 2020 திசெம்பர் 30 | பதிலளிக்கப்படவில்லை. | - மேற்படி - |

| | | |
|---|---|---|
| ஆந் திகதி முதல் அமைச்சிற்கு கையேற்கப்பட்டிருந்தது. அதற்குரிய எந்தவொரு தகவல்களும் செயலாற்றல் அறிக்கையின் மூலம் வெளிப்படுத்தப்பட்டிருக்க வில்லை. | | |

**3.4 முகாமைத்துவ நலிவுகள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 2019 இன் பொருள் மெய்மையாய்வின் போது பற்றாக்குறையாக இனங்காணப்பட்ட தொலைக்காட்சி இயந்திரம் மற்றும் குளிரூட்டி பிரதமரின் பிரத்தியேக செயலாளருக்கு வழங்கப்பட்டிருந்த உத்தியோகபூர்வ இல்லத்தில் காணப்படுகின்றமை டெப் கணனி இயந்திரம் முன்னாள் அமைச்சரின் பிரத்தியே செயலாளரின் பொறுப்பில் காணப்படுவதாக இனங்காணப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டிலும் தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இந்த பொருள் பற்றாக்குறைக்கு பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தரின் சம்பளத்திலிருந்து அறவிட்டு அனுப்புமாறு அந்த உத்தியோகத்தர் தற்போது சேவையாற்றுகின்ற ஊவா மாகாண ஆளுனர் செயலகத்திற்கு 2022.04.28 ஆந் திகதி அறிவிக்கப்பட்டிருந்தது. தொலைக்காட்சி இயந்திரம் மற்றும் குளிரூட்டிகள் தற்போது அரச நிர்வாக அமைச்சின் பொறுப்பில் உள்ளதுடன் அதனை தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. டெப் கணனி இயந்திரத்தை கையளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. அவ்வாறு கையளித்தல் தொடர்ந்தும் தாமதமடையுமாயின் அதன் பெறுமதியையும் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | பொருள் மெய்மையாய்வின் போது பற்றாக்குறையாக இனங்காணப்பட்ட பொருட்களை தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | கொத்மலை நீர்ப்பாசன மற்றும் நீர்வள முகாமைத்துவம் தொடர்பான சர்வதேச பயிற்சி நிறுவனம்<br>---------------------------------------------- | | |
| | நீர்ப்பாசன மற்றும் நீர்வளங்கள் முகாமைத்துவ அமைச்சரால் 2017 யூலை 04 ஆந் திகதி சமர்ப்பிக்கப்பட்ட அமைச்சரவை குறிப்பின் பிரகாரம் சர்வதேச பயிற்சி பாடநெறியை நடாத்துவதற்கான வசதிகளை வழங்கும் வகையில் வெளிநாட்டு நிதி கணக்கு திறந்து பேணிச் செல்வதற்கும், பிரதிநலன்கள் மற்றும் முன்மொழிவை அடிப்படையாகக் கொண்டு வெளிநாட்டு பயிற்சி பாடநெறியை நடாத்துவதற்கும் அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியிருந்த போதிலும் 2022 வரையிலும் அவ்வாறு மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. | அமைச்சரவைக் குறிப்பில் குறிப்பிடப்பட்ட நலன்கள் மற்றும் முன்மொழிவை அடிப்படையாகக் கொண்டு வெளிநாட்டு பயிற்சி பாடநெறியை நடாத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | அமைச்சரவை அங்கீகாரத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | 2012 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட கொத்மலை நீர்ப்பாசன பயிற்சி நிறுவனத்தினால் 2012 ஆம் ஆண்டு முதல் 2020 வரை சேர்க்கப்பட்டு பயிற்சிகள் பூர்த்தி செய்யப்பட்ட எண்ணிக்கை 172 ஆக இருந்ததுடன் 2020, 2021 ஆம் ஆண்டுகளில் சேர்க்கப்பட்டு தற்போது பயிற்சி பெறுபவர்களின் எண்ணிக்கை 61 ஆகும். அதன் பிரகாரம் நிறுவனத்திற்கு வழங்கப்பட்டுள்ள வளங்களுக்கு மேலதிகமாக நிறுவனத்தின் வருடாந்த மொத்த செலவினத்தின் ஒட்டுமொத்தம் ரூபா 36.5 மில்லியன் ஆகும். 09 வருடங்களில் பயிற்சி | நிறுவனம் தாபிக்கப்பட்டதன் மூலம் எதிர்பார்க்கப்பட்ட நோக்கத்தை அடைந்து கொள்ளும் வகையில் பொருளியல் உதவியாளர் மற்றும் தொழில்நுட்ப உதவியாளர்களை சேர்த்து பயிற்சியளித்தலை உச்ச அளவில் மேற்கொள்வதற்காக கணக்காய்வினால் சுட்டிக் காட்டப்பட்டுள்ள பிரகாரம் ஒரு தடவையில் பயிற்சி பெறக்கூடிய உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை தொடர்பாக நியதிகளை தயாரித்து பாடநெறியொன்றை ஆரம்பிப்பதற்கு முன்னர் எனது அங்கீகாரத்தை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிறுவனத்தின் செயற்பாட்டு நடவடிக்கைகள் தொடர்பாக மீண்டும் மீளாய்விற்கு உட்படுத்தி ஒதுக்கப்பட்ட வளங்களை உச்ச அளவில் பொருளாதார நலன்களை வழங்கும் வகையில் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | பெற்ற மற்றும் பயிற்சி பெறுகின்ற மாணவர்களின் எண்ணிக்கையில் சராசரி மாணவர்கள் 20 ஆகும். அதன் பிரகாரம் ஒரு மாணவருக்காக ஏற்பட்ட பயிற்சி கிரயம் ரூபா ஒரு மில்லியனை விஞ்சியிருந்தது. | | |
| (ஈ) | 2017 ஆம் ஆண்டு முதல் 2022 வரை உள்நாட்டு நிறுவன ஊழியர்களுக்காக 218 குறுங்கால பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் ஒழுங்கமைக்கப்பட்டிருந்த துடன் அந்த பயிற்சி பாடநெறிக் கட்டணத்தை அறவிடல், செலவினங்களை செய்தல் தொடர்பாக முறையற்ற தன்மை காணப்பட்டது. | அமைச்சரவை குறிப்பின் பிரகாரம் ஒவ்வொரு பாடநெறிக்காகவும் அறவிடப்படுகின்ற கட்டணத்தை தீர்மானிப்பதற்கு உரிய குறிகாட்டிகளை மீளாய்விற்கு உட்படுத்தி பாடநெறிக் கட்டணத்தை அறவிடல் வேண்டும். ஒவ்வொரு பாடநெறிக்காகவும் ஏற்படுகின்ற செலவினங்களை செய்யும் போதும் குறிகாட்டிகளை தீர்மானித்து செலவின மதிப்பீட்டை தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38 ஆம் பிரிவின் கீழ் முறைமைகளை மீளாய்வு செய்யும் போது விசேட கவனம் செலுத்தி புதிய உள்ளக கட்டுப்பாட்டு முறைமை யொன்றை அறிமுகப்படுத்து வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 4. மனித வள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டில் அமைச்சில் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் 179 ஆக இருந்ததுடன் உள்ளபடியான பதவியணியினர் 125 ஆகும். அதன் பிரகாரம் சிரேஷ்ட நிலையில் 20 பதவிகள், மூன்றாம் நிலையில் 01 பதவி, இரண்டாம் நிலையில் 22 பதவிகள் மற்றும் ஆரம்ப நிலையில் 11 பதவிகள் என்பவற்றில் 54 வெற்றிடங்கள் காணப்பட்டன. | பதிலளிக்கப்படவில்லை. | பதவிகளின் தேவையை மீளாய்விற்கு உட்படுத்தி தேவையான பதவியணியினர் வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |